அனுப்புநர்

முனைவர். சி. உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
இணை இயக்குநர்(கல்வி), பாண்டிச்சேரி
அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

**ந.க.எண். 086254 / எப்1 /2020** **நாள்.11.02.2021**

**ஐயா / அம்மையீர்,**

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – 2020–2021–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – பள்ளி மாணாக்கரின் பெயர்பட்டியலை பதிவேற்றம் செய்வதற்கும், தேர்வு கட்டணம் செலுத்துவதற்கும் கூடுதலாக கால அவகாசம் வழங்குதல் மற்றும் TML கட்டணம் செலுத்துதல் – தொடர்பாக.

பார்வை : அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்:27.01.2021

------

பார்வையில் காணும் இவ்வலுவலகச் செயல்முறைகளில், 2020–2021–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் தங்கள் பள்ளியில் பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு பயிலும் மாணாக்கரது விவரங்களை **01.02.2021** முதல் **11.02.2021** வரையிலான நாட்களில் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்து, தேர்வுக் கட்டணத்தினையும் இணையதளம் வாயிலாக செலுத்தவேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. இந்நிலையில் ஒரு சில பள்ளிகளின் மாணாக்கரின் விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்வதில் சில சிரமங்கள் ஏற்படுகின்றன எனத் தெரிவித்துள்ளதால், **பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு மாணாக்கரின் விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்வதற்கும், இணையதளம் மூலம் தேர்வுக்கட்டணத்தினை செலுத்துவதற்கும் 12.02.2021 முதல் 18.02.2021 வரையிலான நாட்களில் கூடுதலாக கால அவகாசம் வழங்கப்படுகிறது.**

மேலும், அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் **12.02.2021** முதல் **18.02.2021** வரையிலான நாட்களில் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று பின்வரும் வழிமுறைகளை பின்பற்றி **2020–2021–**ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்க்கான தேர்வு முடிவுகள் அடங்கிய அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை **(TML)** ஆன்லைன் மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான கட்டணம் ரூ.300/—ஐ செலுத்த வேண்டும். **அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளும் (எந்த ஒரு பள்ளியும் விலக்கு இல்லாமல்) இக்கட்டணத்தினை செலுத்தவேண்டும்.**

| | |
|---|---|
| **STEP 1 :** | **www.dge.tn.gov.in** |
| **STEP 2 :** | **Online Portal for School and Educational Offices** |
| **STEP 3 :** | **SSLC Examinations 2020-2021 Nominal Roll Registration**<br>**(OR)**<br>**HR. Secondary (First Year) Examinations 2020 - 2021 Nominal Roll Registration** |
| **STEP 4 :** | **TML Payment of SSLC**<br>**(OR)**<br>**TML Payment of HSC XI** |

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும், மேற்குறிப்பிட்ட அறிவுரைகளை தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் **15.02.2021** முதல் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password – ஐ பயன்படுத்தி தங்களது ஆளுகைக்குட்பட்ட பள்ளிகளுள், பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பணியினை துவங்கிய பள்ளிகளின் விவரங்களை அறிந்து கொண்டு, அப்பணியினை மேற்கொள்ளாத பிற பள்ளிகளுக்கு பெயர்பட்டியல் தயாரிக்கும் பணியினை விரைந்து முடித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/—
**இயக்குநர்**

**<u>நகல்:</u>** அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்